பெருநகர சென்னை மாநகராட்சி

செ.வெ.எண். 124 நாள்: 01.09.2016

# பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக, அம்மா வாரச்சந்தை அமைப்பது தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களின் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், அம்மா வாரச்சந்தை அமைப்பது தொடர்பாக மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.பாலகிருஷ்ண ரெட்டி அவர்கள், மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் ஆகியோரின் முன்னிலையில் கலந்தாலோசனைக்கூட்டம் 31.08.2016 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில், அம்மா வாரச்சந்தையில் அமையவுள்ள 200 கடைகளில் சுமார் 40 கடைகள் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை துறை, கால்நடைத்துறை சம்பந்தப்பட்டவை ஆகும். இந்தத் துறைகள் சார்ந்த பொருட்களை மாவட்டங்களில் இருந்து கொண்டுவர செய்ய வேண்டிய போக்குவரத்து வசதிகள், என்னென்ன பொருட்கள் உள்ளது என்பதைக் கண்டறிந்து, அந்தப் பொருட்களின் உற்பத்தியாளர்களாகிய விவசாயிகளை மேற்படி துறைகளின் மாவட்ட அலுவலர்கள், ஒன்றிய அளவில் உள்ள அலுவலர்கள் ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும்.

பொருட்களை கொண்டுவரும் உற்பத்தியாளர்களுக்கு ஒரே சீரான அடையாள அட்டை வழங்க வேண்டும். அழுகும் தன்மையுடைய பொருட்களை பாதுகாக்க வேண்டிய வசதிகளை செய்ய வேண்டும். பொருட்களை உற்பத்தியாளர்கள் வியாபாரிகளுக்கு கொடுக்கும் விலை அல்லது குறைவான விலை நஷ்டம் ஏற்படாத அளவிற்கு நியாயமான உற்பத்தி விலையில் கொடுக்க வேண்டும். பொருட்களை கொண்டுவரும் தொலைதூர மாவட்ட விவசாயிகள் தங்குவதற்கும், மீதப்படும் பொருட்களை சேமிப்பதற்கு மாநகராட்சியின் சமூகநலக்கூடங்களை பயன்படுத்தி கொள்ளலாம்.

அம்மா வாரச்சந்தை அமையவுள்ள இடம் முழுமையும் அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது. விளக்கு கம்பங்கள், மின் இணைப்புக்கு தயார் நிலையில் உள்ளது. விவசாயப் பொருட்களை விற்பனைக்கு கொண்டுவருவதற்கு அக்ரவேட்டர்கள் (Aggravator) இருப்பதுபோல் கால்நடைத்துறை ஏற்பாடு செய்ய வேண்டும். துறைதோறும் ஒருங்கிணைப்பு அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டும். அம்மா வாரச்சந்தையில் விற்பனை செய்யப்படும் எந்த பொருளும், இதர சில்லறை கடைகள், கோயம்பேடு மார்க்கெட்டில் உள்ள விலையை விட குறைவாகவும், தரமாகவும் இருக்க வேண்டும். அம்மா வாரச்சந்தையில் பொருட்களை விற்போரும், வாங்குவோரும் இரட்டிப்பு லாபம் மற்றும் மகிழ்ச்சியாக இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதர சேவைத்துறைகளையும் தொடர்ந்து உயர்மட்ட அளவில் ஒருங்கிணைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வணிகவரித்துறை ஆணையர் சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., வேளாண்துறை ஆணையர் டாக்டர்.மு.இராஜேந்திரன், இ.ஆ.ப., கால்நடைத்துறை ஆணையர் திரு.ஆப்ரஹாம், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**